02.04.2025 OS.No. 124/2018

பி.வா.சா. 3 பெயர்: மணி த/பெ. சண்முகம்

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். வாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. P.C. கிருஷ்ணன் தரப்பில் அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். எனது ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிறந்த தேதி என்னவென்றால் 20.04.1960 ஆகும். நான் எந்த ஊரில் பிறந்தேன் என்றால் அம்பேத்கர் நகர் ஊத்தங்கரையில் பிறந்தேன். நான் பிறந்த பின்னர் தற்போது எங்கே வசித்து வருகிறேன் என்றால் அம்பேத்கர் நகர் ஊத்தங்கரையில் தான் வசித்து வருகிறேன். எனது தந்தை மற்றும் தாயார் பெயர் என்னவென்றால் சண்முகம் , சென்னம்மாள் ஆகும். எனக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு தம்பி இறந்துவிட்டார். அவர் பெயர் முருகன் ஆகும். முருகனின் மனைவி மற்றும் பிள்ளைகள் பெயர் என்னவென்றால் மனைவி பெயர் ராதா , 2 பெண் பிள்ளைகள் , சென்னம்மாள் , தேவிகா, ஒரு ஆண் பிள்ளை பெயர் சரவணன். நான் எதற்காக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் P.C. கிருஷ்ணன் தரப்பினர் மீது அவரது சகோதரிகள் கௌரி, லட்சுமி, முருகம்மாள் பாகம் கேட்டுள்ளதால் அது பற்றி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கௌரி தந்தை பெயர் என்னவென்றால் சென்ராயன், தாயார் பெயர் செல்லியம்மாள். யார் பெயரில் சொத்து இருந்தது என்றால் செல்லியம்மாள் பெயரில் சொத்து இருந்தது. அவர் கௌரி மற்றும் P.C. கிருஷ்ணன் ஆகியோர்களுக்கு தாயார் ஆவார். வாதி கௌரி என்பவரின் தாயார் பெயரில் சொத்து இருந்தது உண்மையென்றால் சரிதான். கௌரி 23.12.2023 ம் தேதியில் மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு முகாமில் வருவாய்துறை அலுவலர்களிடம் பிரதிவாதிகளுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகாரில் விசாரணையின் போது சமாதானமாக செல்வதாக நான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சரவணன் , ராதா ஆகியோர்களுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

2. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். கௌரிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் தேதி எனக்கு தெரியாது. வாதிக்கு 10 பவுன் நகை போட்டதாக சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக 10 பவுன் நகை போட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கல்யாண சீர்வரிசை தட்டு, முட்டு சாமான்கள் கொடுக்கப்பட்டது என்றும், நகை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி அவரது பெற்றோரிடம் சொத்து கேட்டதாக ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நிலத்திற்கான வரிகளை நிலத்தின் உரிமையாளர் தான் செலுத்த வேண்டும் என்று விதி உள்ளதா என்றால் இல்லை. நான் 3,4

பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வாதி ஊத்தங்கரை அம்பேத்கர் நகரில் பிறந்து வாழ்ந்து வந்தாரா என்றால் அங்குதான் பிறந்தார் திருமணத்திற்கு பின்னர் மலையாண்டஅள்ளி என்ற அவரது கணவர் ஊருக்கு சென்று விட்டார். ஊத்தங்கரைக்கும் மேற்படி மலையாண்டஅள்ளி ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 22 கி.மீ. தூரம் இருக்கும். மேற்படி ஊருக்கு சென்றுவரலாம் என்று சொன்னால் பேருந்து வசதி உள்ளது சென்று வரலாம். வாதி கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்து வந்தாரா என்றால் இல்லை. வாதி அவரது பெற்றோருடன் வாழ்ந்து வந்தார் என்பதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஊத்தங்கரை அம்பேத்கர் நகரில் வசித்து வரவில்லை என்றும் அதனால் வாதி பற்றி விவரம் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஊத்தங்கரை தவிர வேறு ஊரில் வசித்து வந்தேனா என்றால் நான் கிருஷ்ணகிரியில் அஞ்சல் துறையில் வேலை செய்து ஆனால் தினமும் வேலைக்கு ஊத்தங்கரையில் இருந்து தான் சென்று வருவேன். எனக்கு அம்பேத்கர் நகர் ஊத்தங்கரையில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. வெளியூரில் வீடு உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி மற்றும் மகன் பெயரில் வெளியூரில் வீடு உள்ளதா என்றால் இல்லை. தாய் தந்தையர் இறந்து விட்டால் அவர்களது சொத்துக்களை பிள்ளைகள் வாரிசு படியாக உரிமை கோருவார்கள் என்று சொன்னால் சரிதான். தாய் தந்தையர் சொத்தை பிள்ளைகள் கேட்பது தவறானதா என்றால் வாதிக்கு தேவையானதை ஏற்கனவே கொடுத்துவிட்டதால் பாகம் கேட்பது தவறானது என்று சொல்கிறேன். நான் வாதிக்கு எதிராக பொய்யான சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதி பிரதிவாதிகளுக்கு சொந்தகாரரா என்றால் வாதி எனக்கு அத்தை முறை ஆகும். P.C. கிருஷ்ணன் எனக்கு சித்தப்பா முறை ஆகும். வாதிக்கு தாவா சொத்தில் பாகம் கோர சட்டப்படி உரிமை உள்ளது என்றும் அதை நான் மறுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.